# கொழும்பு மாநகர சபை

# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுன் 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுன் 14 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டு இறுதியில் கணக்கிலிடப்பட்ட ரூபா 185,503,015 பெறுமதியான இறுதிக் கையிருப்பின் பெறுமதி கையிருப்புப் புத்தகங்களுக்கமையக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஊழியர்கள் மூவர் ரூபா 11,688,530 இழப்பீட்டைக் கோரி சபைக்கு எதிராகத் தொடுத்த 3 வழக்குகள் மீளாய்வாண்டு முடிவிலும் விசாரிக்கப்பட்டவாறிருந்தபோதும் அவை தொடர்பாக ஏற்படக்கூடிய எதிர்பாராப் பொறுப்பு கணக்கில் வெளிக்கொணரப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வீதி அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 50,290,165 வருவாயாகக் கணக்கிலிடப்படாது கடன்பட்டோர் கணக்கொன்றில் செலவு மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட 27 வாகனங்களது பெறுமதி ரூபா 50,095,548 ஆகும். எனினும், ரூபா 11,792,299 மாத்திரமே சொத்தாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) நிர்மாண வேலை ஒப்பந்த உடன்படிக்கைப் பெறுமதியானது ஒப்பந்தம் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே சொத்தாகக் கணக்கிலிடப்பட்டுக் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் 1998 முதல் 2011 வரையிலான ஒப்பந்தங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் போலியான சொத்துக்களும் பொறுப்புகளுமாக ரூபா 91,581,279 நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிடு முடிவில் உள்ளவாறு கட்டிடக் கணக்கிலிடப்பட்ட ரூபா 28,110,069 பெறுமதிக்குரிய நிமாாண வேலைகள் எதுவுமே 2011 டிசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரீசீலனையில் புலனாகாதலால் அச் சொத்தும் போலிச் சொத்து என அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டு முடிவில் கட்டளை வழங்கப்பட்டு, பெறப்படாதிருந்த இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் பெறுமதியான ரூபா 13,962,597 சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் 3 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 2012 ஜனவரியில் ரூபா 14,985.635 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2011 ஆம் ஆண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஐ) பெறவேண்டிய வருவாயாகிய ரூபா 1.183,663 மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளான ரூபா 1,323,722 என்பன கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன.

(ஒ) 2004 தொடக்கம் 2008 வரை வாடகை செலுத்தப்படாமையால் சுவீகரிக்கப்பட்ட விற்பனைக் கூடங்களுக்கு மேலதிக கட்டணமாக 20 % சேர்ந்து தண்டப்பணம் வாடகை என 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,590,582 மீதி கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஓ) கொழும்பில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் உலக வங்கிச் செயற்திட்டம் என்பவற்றின் கீழ் பெறப்பட்ட நிதியேற்பாட்டில் மீளளிப்புச் செய்யப்பட்ட முடியாத ஆரம்ப செயற்திட்டச் செலவினமான ரூபா 3,227,110 செலவாகக்

கணக்கிலிடப்படுவதற்குப் பதிலாக நானாவித கடன்பட்டோராகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2010 டிசெம்பர் 31 தொடக்கம் பெறுமதி சேர் வரி திருத்தங்களுக்கு உள்ளானதன் பின்னர் தேங்கி நின்ற ரூபா 576,472 மற்றும் ரூபா 710,080 என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது வருவாயிலிடப்பட்டிருந்தன.

(அஅ) 1974 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் 33 கணக்குகளது வரவு மீதிகளது கூட்டுத் தொகையாகிய ரூபா 313,642,510 மற்றும் 26 கணக்குகளது செலவுக் கூட்டுத்தொகையாகிய ரூபா 181,020,547 என்பன தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

(அ) முப்பதெட்டு கணக்கு விடயங்களது மீதி மற்றும் அவற்றிக்குரிய பட்டோலை மீதி என்பவற்றிக்கிடையில் இணங்காதிருந்த கூட்டுத்தொகை ரூபா 23,774,346 ஆகும்.

(ஆ) ஒவ்வொரு திணைக்களத்தினதும் ஊழியர் கடன் மீதி மற்றும் அவற்றிற்குரிய கணக்குகளின் பிரகாரம் கடன் மீதிகளுக்கிடையே ரூபா 52,067,204 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

(அ) தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 11,694,354,463 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்பதிகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) 2013 ஜுன் 14 வரை ரூபா 1,093,177 கூட்டுத்தொகையுடைய 32 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2013 மே 08 ஆந் திகதியளவில் 21 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 2,651,146,538 ஆகும்.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம்

ரூபா 161,837,367 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 125,446,519 ஆகும்.

(ஆ) மாநகர சபை குறிப்பிடத்தக்க காலமாகத் தொடர்ந்து பற்றாக்குறையில் நிலவி வருவது அவதானிக்கப்பட்டது. அதனால் சபையின் தொழிற்படு மூலதனம் தொடர்ந்து பாதிப்பிற்குள்ளாகி அதன் காரணமாக சபை தொடர்ந்து நிலவுவதற்கான சூழல் தாக்கத்திற்குள்ளாகி சீரற்றவாறிருந்தது. முன்னைய 5 ஆண்டுகளது பற்றாக்குறை விபரம் வருமாறு.

| **ஆண்டு** | **பற்றாக்குறை** |
|---|---|
| | ரூபா |
| 2006 | (276,605,620) |
| 2007 | (368,550,962) |
| 2008 | (304,804,165) |
| 2009 | (360,539,777) |
| 2010 | (125,446,520) |

(இ) முன்னைய கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத பெற வேண்டிய, கொடுப்பனவு செய்ய வேண்டிய மற்றும் வருமான, செலவினங்கள் என்பன முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கின் மூலம் கணக்கிலிடப்படுவது சபையால் தொடர்ந்து செய்யப்படுவதால் குறித்த ஓராண்டினது நிதிசார் விளைவுகள் நிச்சயமற்ற தன்மை வாய்ந்ததாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, முன்யை 5 ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட தாக்கம் பின்வருமாறு அமையும்.

| **கணக்கீட்டு ஆண்டு** | **நிதிசார் விளைவு மிகை / (பற்றாக்குறை)** | **அடுத்து வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகர சீராக்கல் வரவு / செலவு** | **சீராக்கலின் பின்னரான விளைவுகள்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2005 | 90,846,722 | 49,396,657 | 140,243,379 |
| 2006 | 360,001,825 | (14,894,954) | 345,106,871 |
| 2007 | (614,038,292) | (152,073,255) | (766,111,547) |
| 2008 | (162,900,199) | 204,851,320 | 41,951,121 |
| 2009 | 818,149,934 | 233,731,266 | 1,051,881,200 |
| 2010 | (470,289,942) | 170,894,201 | (299,395,741) |

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

கீழே குறிப்பிடப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டுப் பற்றாக்குறை/குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வங்கியில் காணப்படும் இரு கணக்குகளில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு முடிவுகளில் அவதானிக்கப்பட்ட மேலதிகப் பற்று முறையே ரூபா 744,088,787 மற்றும் ரூபா 752,570,824 என்பனவாகும்.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரிக்கையில் 7 வங்கிக் கணக்குகளில் 25 முதல் 60 நாள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(இ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் பகுப்பாய்விற்கமைய புலனாகிய தகவல்கள் பின்வரும் கூற்றில் காணப்படுகின்றன.

| | **வங்கிக் கணக்குகளது எண்ணிக்கை** | **1 ஆண்டு** | **01 – 03 வரையான ஆண்டுகள்** | **3 ஆண்டுகளுக்கு மேற்பட்டது** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நிதிப் பிரமாணம் 396(ட) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படாத, வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 02 | 2,493,724 | 931,571 | 1,297,229 | 4,722,524 |
| இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத செலவு மீதிகள் | 02 | 89,596 | 726,303 | 786,382 | 1,002,281 |

(ஈ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான முற்கொடுப்பனவுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 6,247,554 மிதியில் 2002 முதல் 2009 வரைக்குமான ரூபா 5,943,264 முற்கொடுப்பனவும் பெற்றோலியப் பொருள் அல்லாதவற்றைக் கொள்வனவு செய்வதற்கான முற்கொடுப்பனவுக் கணக்கில் காணப்படும் ரூபா 42,323,992 மீதியில் 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பிருந்து வரும் மீதியான ரூபா 41,735,584 என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. அவற்றுள் பெரும்பாலான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவாக இனங்காணப்பட்டுள்ளன எனக் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டபோதும் கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும்போது குறித்த பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 3,875,489 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத் தொகையை 4 முதல் 7 மாத காலத்திற்குள் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

மாநகர முதல்வரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,000,000 | 2,248,050 | 2,975,379 |
| (ii) | குத்தகை வாடகை | 180,256 | 151,031 | 540,468 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 34,321 | 34,321 | - |
| (iv) | பிற வருவாய் | 46,946 | 26,953 | 19,993 |

**2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 491,397,490 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 918,726,819 |

**2.3.3 தீர்வையும் வரியும்**

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு தீர்வை வரிக் கூறில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மொத்தச் சொத்துக்களது எண்ணிக்கை 672 ஆகும். அச்

சொத்துக்களில் ரூபா 1,455,059,268 கூட்டுத்தொகையுடைய நிலுவை நிலவியது. பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட நிலுவை உள்ள சொத்துக்களது எண்ணிக்கை 289 ஆகும். இவற்றுள் ரூபா 1,171,520,336 நிலுவை நிலவியது. இந் நிலுவை மீதிகள் மொத்த வரி நிலுவையின் 80 சதவீதமாகின.

(ஆ) 2006,2007 ஆம் ஆண்டுகளில் ரூபா 54,402,525 தீர்வை வரி நிலுவைகள் தொடர்பாக 116 சொத்துக்கள் ஏலத்திலிடப்பட்டன. இவற்றின் சட்டபூர்வ உரிமையைச் சபை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் அச்சொத்துக்குரியவர்கள் இதுவரை சொத்துக்களை அனுபவித்தவாறு இருப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட 3,389 அரச சொத்துக்களில் 1571 சொத்துக்களது நிலுவையாக உள்ள வரி மீதி ரூபா 244,680,682 ஆகும். இது மொத்த வரி நிலுவையில் 17% ஆகும்.

(ஈ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 254அ(1),(2) மற்றும் 256 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மாநகர சபை அறவிட வேண்டிய தீர்வை வரி என்பவற்றை அறவிடுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மாநகர சபை ஆணையாளர் மேற்கொள்ள வேண்டும். எனினும், மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 2,682,525,723 க்கான தீர்வையும் வரியும் அழைப்பானைக் கட்டணம் செலுத்தப்படாத சொத்துக்களுக்குரிய நிலுவைகளை தடைகள் மூலம் ஏலத்தில் விற்பனை செய்து பணத்தை அறவிடுவதற்கு 2005 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு முடிவு வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 வாடகை நிலுவை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 254அ (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் மாநகர சபை அறவிட வேண்டிய வருவாயை அறவிட்டு அதனைச் சபையின் நிதியத்தில் செலவு வைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மாநகர சபை ஆணையாளர் மேற்கொள்ள வேண்டுமாயினும், வாடகை நிலுவையை அறவிடுவதற்கோ சொத்தை மீளப் பெறுவதற்கோ துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 228.243,319 வாடகை நிலுவையாகவும் தண்டப் பணமாகவும் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.3.5 பொறளை சுப்பர் மார்க்கெட்டின் வாடகை நிலுவை

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடகை நிலுவையான ரூபா 21,000,571 உடன் தொடர்புடைய 53 கடைகள் முத்திரை பொறிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தன. 38 கடைகளுக்கு உடன்படிக்கைப் பத்திரமோ அல்லது ஒப்படைக்கப்பட்ட

கடிதமோ மிருக வைத்தியப் பிரிவினால் சட்டப்பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாமையால் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள முடியாதிருந்தது. எஞ்சிய 15 கடைகளுக்கும் அழைப்பானைப் பத்திரங்களை அனுப்பியபோதும் தவறான முகவரி மற்றும் வதிவிட மாற்றம் என்பன காரணமாக அவற்றுள் 10 திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. இதன் காரணமாக, 48 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையாகிய ரூபா 8,303,893 மற்றும் தண்டப் பணமாகிய ரூபா 10,280,857 என்பவற்றை அறவிட முடியாதிருந்தது.

(ஆ) வாடகையைச் செலுத்தாமையால் கடைகளைத் திருப்பிப் பெறுவதைத் தடுப்பதற்கு பொறளை சுப்பர் வியாபாரச் சங்கமும் கடைக்குரியவர்களுமான ஆறு பேர் தொடர்ந்த வழக்குகளில் மூன்று வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டதாக சட்டத்துறைப் பிரிவு 2011 நவம்பர் 23 ஆந் திகதியன்று மாநகர பொருளாளருக்கு அறிவித்திருந்தபோதும், கணக்காய்வுத் தினம் வரை சொத்தைப் திருப்பிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மூன்று மாதங்களுக்கு மேலாக கடை வாடகை நிலுவையாக இருக்குமிடத்து கடைகளைச் சுவீகரித்த வேண்டுமாயினும், 2011 ஆம் ஆண்டின்போது வாடகை எதனையும் செலுத்தாத 70 கடைகள் சம்பந்தமாக வர்த்தக நிலையங்களை ஒப்படைக்கும் கடிதத்தின் (ஈ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது வியாபாரத்தை நடத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அவ் வர்த்தக நிலையங்கள் கடைகள் என்பவற்றிலிருந்து 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 43,190,364 வாடகையாகவும் மேலதிக கட்டணமாக ரூபா 3,257,277 என்பனவும் அறவிடப்பட வேண்டியிருந்தன. குறித்த கடிதத்திற்குப் புறம்பாக வர்த்தக நிலையத்தவர்கள் மற்றும் சபை ஆகிய இருசாராருக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் வியாபாரத்திற்கான அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டியபோதும், 2008 ஆம் ஆண்டு தொடக்கம் அனுமதிப்பத்திரம் பெற்றிராத 69 வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான வளங்கள்

(அ) பெறுமதி கணிப்பிடப்படாத 9 வாகனங்கள் மாநகர சபைத் தொழிற்சாலையில் பல்வேறு காலநிலை வேறுபாடுகளாலும் பாதிக்கப்படும் விதத்தில் துருப்பிடித்தவாறிருந்தன.

(ஆ) மக்கள் வங்கியின் 2 நடைமுறைக் கணக்குகளில் ரூபா 617,771 கூட்டுத்தொகையுடைய மீதி ஏறக்குறைய 5 ஆண்டுகளாகப் பயனற்றவாறிருந்தது.

## 2.5 ஊழியர் கடன்

(அ) ஊழியர் கடன் கணக்கில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடற்ற கடன் மீதி ரூபா 18,703,903 ஆகும். அதன் காலப் பகுப்பாய்வு பின்வருமாறு

| செயற்பாடற்ற கடன் தொகை | 1 ஆண்டிற்குக் குறைந்தது | 1 ஆண்டிற்கு மேற்பட்டதும் 3 ஆண்டுகளுக்குக் குறைவானதும் | 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் 5 ஆண்டுகளுக்குக் குறைவானதும் | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18,703,903 | 1,458,025 | 1,543,757 | 2,568,295 | 13,133,826 |

(ஆ) இவற்றிற்குப் புறம்பாக, பதவியணியினர் கடனாகிய ரூபா 119,026,735 அநேக ஆண்டுகளாக மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 நவம்பர் 23 ஆந் திகதியன்று பிரத்தியேக ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பொறளை மற்றும் கிருலப்பனை பொதுச் சந்தைச் சுத்திகரிப்புச் சேவை சம்பந்தமாக 2012 மார்ச் 14 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட நேரடிப் பரிசோதனையின்போது குறித்தவாறு சுத்திகரிப்பு வேலை நடைபெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்படி நிலைமை தொடர்பாகக் குறித்த சந்தை மேற்பார்வையாளர்களால் 2011 மார்ச் 01 மற்றும் 2011 ஒக்டோபர் 21 ஆகிய திகதிகளில் மாநகர மிருக வைத்தியருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின்போது ஒப்பந்தகாரருக்கு ரூபா 3,365,984 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஜூலை 28 ஆந் திகதியன்று பிரத்தியேக ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்ட கொள்ளுப்பிட்டிய சுபர் மார்க்கட் சுத்திகரிப்பு சேவை முறையாக நடைபெறாததை சந்தையின் மேற்பார்வையாளர்கள் மாநகர சபை மிருக வைத்தியருக்கு 2010 ஆகஸ்ட் 31, 2010 செம்டெம்பர் 23, 2011 பெப்ரவரி 20 ஆந் திகதிகளில் அறிவித்திருந்தும் 2010 ஆகஸ்ட் முதல் 2011 ஜூன் வரை ஒப்பந்தகாரருக்கு ரூபா 548,717 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சந்தையைச் சுத்திகரிப்பதற்கு மாநகர சபை ஊழியர்களைப் பயன்படுத்தி சம்பளமும் மேலதிக

நேர வேலைக் கொடுப்பனவுமாக அக்காலப்பகுதியின்போது அவர்களுக்கு ரூபா 1,039,049 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) டீன்ஸ் வீதியிலுள்ள பொதுச் சந்தையின் முதலாம் மாடியை நடைபாதை வியாபாரக் கூட்டுத்தொகுதியாக மாற்றுவதற்கென 41 சிறு கடைகளை அகற்றி மின் வெளிச்சம் பெறுவதற்காக 2011 ஜனவரி 12 ஆந் திகதியன்று ரூபா 124,701 மற்றும் வர்ணம் பூசுவதற்கு ரூபா 460,097 எனச் செலவிடப்பட்டிருந்தன. 2011 பெப்ரவரி 02 அந் திகதியன்று இரண்டாவது மாடி மறுசீரமைப்புச் செய்யப்படுவதற்காக ரூபா 820,784 செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமான 2012 மார்ச் 16 வரை அவ்விடங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொடுப்பனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 பந்திக்கு முரணாக 2010 ஜூலை 01 தொடக்கம் 2011 நவம்பர் 30 வரை ரூபா 111,450 செலவில் மாநகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வருவாயை ஈட்டாத வாகனத் தரிப்பிடத்தை முகாமைத்துவமிடும் வேலை கேள்விப் பத்திரங்களைக் கோராமலேயே 2 நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன

(ஆ) நோய் நிவாரணப் பிரிவிற்கு மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் கேள்விக்குரிய உடன்படிக்கையின் 1 ஆம் பகுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது 2 ஆண்டுகளுக்கேனும் மேற்பட்ட பாவனைக் காலத்தையுடைய மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். எனினும், 2 ஆண்டுகளுக்குக் குறைந்த காலப்பகுதிக்குள் பயன்படுத்தப்பட முடியாது போகும் 7 வகை மருந்துப் பொருட்கள் ரூபா 549,104 ஆகு செலவில் 2011 மார்ச் 22 அன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) உடன்படிக்கையின் 2 ஆம் பகுதியின் 03 ஆம் பிரிவுக்கு அமைய மருந்துப் பொருட்களுக்கான கட்டளை வழங்கப்பட்ட 14 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் அவ்வாறல்லாதிருப்பின் இணக்கத்திற்குள்ளான திகதியன்று மருந்துப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். எனினும், 2011 மார்ச் 04 அன்று வழங்கப்பட வேண்டிய 14 வகை மருந்துப் பொருட்கள் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதி தொடக்கம் 2011 ஜூன் 10 வரையான காலப்பகுதியின்போது 29 முதல் 97 நாட்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மிருக வைத்தியப் பிரிவின் 2 மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பிரதிப் பிரதான மாநகர மிருக வைத்திய உத்தியோகத்தர் பதவிகளில் பதில் கடமையாற்றும் நியமனத்திற்கு அரசாங் சேவை ஆணைக் குழுவே நியமன அதிகாரியாகும் எனினும், முறையான அடிப்படையின்றி மாநகர மிருக வைத்தியரால் 2006 ஆகஸ்ட் 06 முதல் 2012 ஆகஸ்ட் 29 வரைக்குமான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) நோய் நிவாரணப் பிரிவுக்கான மருத்துவப் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் 4 வகை மருந்துப் பொருட்களுக்கு அரச மருந்துக் கூட்டுத்தாபனம் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்தபோதிலும், கூடிய விலையைச் சமர்ப்பித்த பிற நிறுவனங்களிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால் 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 1,402,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாயிற்று

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

### 2.8.1 மேலைத்தேய மருந்தகம் மற்றும் உத்தியோகபூர்வ மனை என்பவற்றை நிர்மாணித்தல்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஒக்டோபர் 12 ஆந் திகதியன்று ரூபா 21,532,526 க்கு பிரத்தியேக ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கொட்டா வீதி மருத்துவ மற்றும் உத்தியோக பூர்வ மனை நிர்மாண வேலைகள் தொடர்பாக 2012 ஜனவரி 03 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வின்போது ஒப்பந்த மதிப்பீட்டின் பிரகாரம் அச்சுற்றுவட்டாரத்தில் நடப்பட வேண்டிய ரூபா 77,900 பெறுமதியான பூஞ்செடிகள் நடப்படாமையும் அதன் பொருட்டு வேறு பூஞ்செடிகளை நாட்டியமைக்கு 2011 பெப்பரவரி 28 அன்று ரூபா 202,150 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையும் காரணமாக ரூபா 124,250 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இறுதிக் கொடுப்பனவுச் சான்றிதழின் பிரகாரம் விலை உச்சவரம்பு இல்லை எனக்குறிப்பிடப்பட்டிருந்தபோதும், மேலதிக செலவினமாக ரூபா 178,114 விலைப்பபட்டியலிடப்பட்டு 2011 பெப்ரவரி 28 அன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய வேலை விடயங்கள் மூல மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் அவை மேலதிக வேலையின்

கீழ் காட்டப்பட்டு 2011 பெப்ரவரி 28 அன்று ரூபா 207,306 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

**2.8.2 கொட்டாஞ்சேனை மருந்தகக் கூட்டுத் தொகுதிக்குப் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்**

அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 5.4.8 (ஆ) பந்தியின் பிரகாரம் வேலைகள் தொடர்பானதொரு ஒப்பந்தத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் செயலாற்றல் பிணைமுறி வேலை முடிவடையவுள்ள தினத்திற்குப் பின்பு 28 நாட்கள் வரை செல்லுபடியானதாகும். எனினும், 2008 டிசெம்பர் 23 அன்று கொட்டாஞ்சேனை மருந்தகக் கூட்டுத்தொகுதிக்கும் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குமான ரூபா 18,160,049 க்கான ஒப்பந்தகாரரின் உடன்படிக்கைப் பிரகாரம் வேலை முடிவுற வேண்டிய தினம் 2010 டிசெம்பர் 23 ஆகும். எனினும், செயலாற்றல் பினை முறி சமர்ப்பிக்கப்பட்டு நிர்மாணவேலை தொடர்ந்தவாறிருந்தது. செயலாற்றல் பிணைமுறி 2011 நவம்பர் 22 அன்று காலாவதியாகியிருந்தது. நிர்மாண வேலையானது கணக்காய்வுத் தினமான 2012 ஜனவரி 04 அன்றும் முடியாதிருந்தது. செயலாற்றல் பிணைமுறிக்கு நீடிப்புப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவுக்குத் தயாரிக்கப்பட்ட நான்காவது விலைப் பட்டியலில் பினை முறியினது பெறுமதியாகிய ரூபா 908,002 கழிக்கப்பட்டு ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்குத் தயாராக இருந்தது.

**2.9 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொழும்பு நகரில் நாய்களைக் கட்டுப்படுத்துவது நகர்ப்புற நாய் பராமரிப்பு நிலையத்தின் பிரதான பணியாக இருந்தது. கொழும்பு தேசிய வைத்திய சாலைகளிலிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின்போது நாய்க்கடியினால் வைத்தியசாலையின் வெளிப் பிரிவு நோயாளர் பிரிவில் தடுப்பூசி பெற்றுக்கொண்ட நோயாளிகள் மற்றும் தடுத்து வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்ளான முறையே 12,906 மற்றும் 3,471 என்போரில் பெரும்பாலோனோர் கொழும்பு நகரில் நாய்க்கடிக்குள்ளானவர்களே ஆகும்.

(ஆ) சபைக்குரிய கொட்டாஞ்சேனை மேற்கு மருந்தக வளாகத்தில் அனுமதியின்றி குடியேறிய பெண்மணி ஒருவர் அங்கிருந்து அகற்றப்படுவதற்கு காலிங்க மாவத்தையில் உள்ள மாநகர சபையினது சொத்தில் ஒரு பேர்ச் மாநகர அதிகாரச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 36 (i) (iii) பந்திக்கு முரணாக விசேட ஆணையாளரால் அனுமதியின்றிக் குடியேறிய பெண்மணிக்கு 2011 மார்ச் 10 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது.

## 2.10 சுதுவெல்ல களஞ்சியத்தில் கையிருப்புக் குறைவு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வருடாந்நதப் பொருட் கணிப்பின்போது புலனாகிய 2004 முதல் 2009 பெப்ரவரி வரையான காலப்பகுதியின்போது ஏற்பட்ட ரூபா 1,080,789 கையிருப்புக் குறைவுக்குரிய பெறுமதியை பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 5,000 வீதப்படி 2012 மார்ச் தொடக்கம் சம்பளத்திலிருந்தது. அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், அவர் ஓய்வு பெறும் திகதியான 2014 பெப்ரவரி 23 இல் உள்ளவாறு அவரிடமிருந்து அறவிடக் கூடிய தொகையும் ஓய்வின் போதான பணிக்கொடையிலிருந்து அறவிடக் கூடிய தொகையும் போதுமானதாக அமையவில்லை என கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2008 ஜுன் 09 ஆந் திகதியில் உள்ளவாறிருந்த ரூபா 1,189,453 கையிருப்புக் குறைவு தொடர்பாக அக் களஞ்சியத்தின் மற்றுமொரு பொறுப்பான களஞ்சியப் பொறுப்பாளருக்கு 2012 செப்டெம்பர் 13 வரை குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டு முறையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதற்கோ அல்லது குறைவுக்கான பெறுமதியை அறவிடவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) பிரதான களஞ்சியப் பொறுப்பாளர் பொருள் வழங்கு பத்திரத்தில் ரூபா 1,297,639 பெறுமதியான 6 வகைப் பொருட்களை முறையற்றவாறு பதிவு செய்து களஞ்சியத்திலிருந்து அவற்றை அகற்றியமை தொடர்பான பெறுமதியின் ஒரு பகுதி அறவிடப்பட்டபோதும், மேலும் ரூபா 247,639 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 770க்கமைய நடாத்தப்பட்ட பொருட்களது சரி, பிழை பார்த்தலின் போது பெறுமதி கணிக்கப்படாத குறைவாகப் பயன்படுத்தப்படும் பொருட் கையிருப்பு இருப்பது அவதானிக்கப்பட்டது. அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப் புறம்பாக, அவதானிக்கப்பட்ட மிகை மற்றும் குறைவு சம்பந்தமாக நிதிப் பிரமானத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.11 சர்ச்கைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபை தொழிற்சாலை பயன்படுத்தும் 21-4358 இலக்க முச்சக்கர வண்டியைப் பழுதுபார்ப்பதற்கு 2010 ஜனவரி 31 அன்று தனியார் கராஜ் ஒன்றிடம் அது ஒப்படைக்கப்பட்டு 2010 மே 21 அன்று ரூபா 74,350 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பழுதுபார்த்தலின் பின்பு இயந்திரத்தினது இலக்கத்தை இனங்காண முடியாதவாறு அது உடைந்திருந்தமை புலனாகியது. வண்டியின் நிறமும் நிறுவனத்தின் ஆலோசனை பெறப்படாது மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மாநகர சபை தொழிற்சாலை பழுதுபார்ப்பதற்கென தனியார் கராஜ் ஒன்றிடம் 2007 – 2009 ஆம் ஆண்டுகளில் ஒப்படைத்த 3 வாகனங்கள் கணக்காய்வுத் தினமான 2012 மார்ச் 13 அன்றும் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. விபரம் வருமாறு

| இலக்கம் | வகை | மதிப்பிடப்பட்ட தொகை | பழுதுபார்ப்பதற்கென ஒப்படைக்கப்பட்ட திகதி | தாமதக் காலம் |
|---|---|---|---|---|
| 40 – 5309 | Sky lift | 1,325,600 | 2007.5.23 | 04 ஆண்டுகள் |
| LW – 0272 | அம்புலன்ஸ் | 148,500 | 2009.5.19 | 02 ஆண்டுகள் |
| 41 - 8079 | தீயணைக்கும் இயந்திரம் | 149,500 | 2009.5.19 | 02 ஆண்டுகள் |

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை பின்வருமாறு

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| சிரேட்ட | 348 | 234 |
| மூன்றாம் | 996 | 532 |
| இரண்டாம் | 2,367 | 1,145 |
| ஆரம்ப | 8,427 | 4,770 |

| | | |
|---|---|---|
| | 12,138 | 6,681 |
| | ====== | ====== |

(ஆ) இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவையினது XI அத்தியாயத்தினது 13.1.1 பிரிவின் பிரகாரம் பதில் கடமையாற்றுவதற்கான நியமனத்திற்கு அதற்குரிய உத்தியோகத்தரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், குறித்த நியமன உத்தியோகத்தரது அங்கீகாரமின்றி 8 உத்தியோகத்தர்களுக்கு 5 திணைக்களங்களில் 2004 மே 31 முதல் 2012 மார்ச் 14 வரை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது XI அத்தியாயத்தின் 13.3 பிரிவின்படி நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக ஏற்பாடாகவே பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படலாமெனினும், 20 திணைக்களங்களிலும் 20 உப அலுவலகங்களிலும் 155 உத்தியோகத்தர்கள் 01 முதல் 10 க்கு மேற்பட்ட ஆண்டுகளாக பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டின்போது அவர்களுக்கு ரூபா 2,885,788 பதில் கடமைக்கான படியாக வழங்கப்பட்டுமிருந்தது.

(ஈ) 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் (iii) மற்றும் (iv) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதியக்காரர்களை மீண்டும் வேலையில் அமர்த்துவது 12 மாத காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அதற்கு முரணாக 8 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் 1 முதல் 7 ஆண்டுகளாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்தனர். மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும். காலப்பகுதியின்போது நிறுவனத் தலைவர் பொருத்தமான மாற்றீட்டாளரை இனங்கண்டு அவரைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். எனினும், பொருத்தமான மாற்றீட்டாளரை இனங்காண்பதற்கு குறித்த பிரிவுத் தலைவர்களுக்கு அறிவித்தல் வழங்கவில்லை. அவ்வாறே, அப் பொறுப்பை ஓய்வு பெற்ற உத்தியோகத்தரது கடமைகளுக்கான கடிதத்தில் உள்ளடக்கவுமில்லை.

(உ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2011 மார்ச் 09 ஆந் திகதிய MF/12/958/38/1245 ஆம் இலக்கக் கடிதத்தின்படி 60 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் அரச சேவையில் நிரந்தர பதவிகளில் நியமனஞ் செய்யப்படலாகாது எனும் அரச கொள்கைக்கமைய வேலைக்காலம் நீடிக்கப்படலாகாது. எனினும், 60 வயதைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் 2005 நவம்பர் 04 முதல் 2012 ஜனவரி 31

வரை குறித்த கடிதத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 6 திணைக்களங்களில் பணியிலமர்ததப்பட்டிருந்தனர்.

(ஊ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகர சபைத் தொழிற்சாலையின் பதவியணியினர் வருவதும் செல்வதும் தொடர்பாக கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இரு பணிக்குழுக்களுக்கும் வெவ்வேறு நேரத்தைக் குறிக்கும் 2 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 2.13 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளவாறான அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான சபையின் வருமான செலவினங்கள் மதிப்பிடப்படாமையால் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க அசாதாரண வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் 18 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 279,577,000 ஆகும். இதற்குப் புறம்பாக, பிற செலவின விடயங்களிலிருந்து ரூபா 567,211,160 மாற்றஞ் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மூல நிதியேற்பாட்டின் சதவீதமாகப் பார்க்குமிடத்து மாற்றங்கள் 55 முதல் 859 சதவீதமாகும்.

(இ) பதினாறு திணைக்களங்களில் 308 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 318,705,100 கூட்டுத் தொகையுடைய நிதி முற்றாகப் பயன்படுத்தப்படவிலலை.

(ஈ) ஏழு திணைக்களங்களில் 24 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 146,360,000 முற்றாக வேறு செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வரவு, செலவு திட்டக் கட்டுப்பாடு

(ஈ) வருவாய் நிர்வாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) ஊழியர் கடன்

(எ) ஒப்பந்த நிர்வாகம்

(ஏ) வாகனக் கட்டுப்பாடு